

# சவுண்டீஸ்வரி நடுநிலைப் பள்ளி

# போடிநாயக்கனூர்

## பள்ளி காலை வழிபாட்டுக் கூட்டச் செயல்பாடுகள்

**முகக் கவசம், உயிர்கவசம்**

**இன்று பிலவ ஆண்டு தை மாதம் மாதம் 22 ஆம் நாள்**

**2022 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 03 ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**அதிகாரம் : அறன் வலியுறுத்தல் - குறள் எண் : 38**

வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்

வாழ்நாள் வழியடைக்கும் கல்.

**குறள் விளக்கம்**

பயனற்றதாக ஒருநாள்கூடக் கழிந்து போகாமல், தொடர்ந்து நற்செயல்களில் ஈடுபடுபவருக்கு வாழ்க்கைப் பாதையைச் சீராக்கி அமைத்துத் தரும் கல்லாக அந்த நற்செயல்களே விளங்கும்.

பழமொழி ( Proverb )

***Many hands make work light***

**கூடி வந்தால் கோடி நன்மை**

பொன்மொழி

சகிக்க தெரிந்த ஒருவருக்குத்தான் சாதிக்கவும் தெரியும்

இரண்டொழுக்க உறுதி மொழி

1. பொய்யுரைத்தலால் புகழும் கெடும் எனவே ஒரு போதும் பொய் கூற மாட்டேன்
2. சோம்பலினால் வளர்ச்சி கெடும், எனவே எப்போதும் சுறு சுறுப்பாய் ஊக்கத்துடன் செயல்படுவேன்.

இன்றைய பொது அறிவு வினா விடை

1. தீவுக் கண்டம் என அழைக்கப்படும் நாடு - ஆஸ்திரேலியா
2. நள்ளிரவில் சூரியன் உதிக்கும் நாடு **- நார்வே**

வரலாற்றில் இன்று

சர்வதேச புற்றுநோய் தினம்

இலங்கை சுதந்திர தினம்(1948)



# சவுண்டீஸ்வரி நடுநிலைப் பள்ளி

# போடிநாயக்கனூர்

## பள்ளி காலை வழிபாட்டுக் கூட்டச் செயல்பாடுகள்

### தினமும் ஆங்கிலம் கற்றுக் கொள்வோம்

I think we can start now.

நான் இப்போது தொடங்க முடியும் என நினைக்கிறேன்

I'm waiting for you to be quiet.

நீங்கள் அமைதியாக இருக்க நான் காத்திருக்கிறேன்

### இன்றைய செய்திகள்

⇒ தமிழகத்தில் நேற்று 12 ஆயிரத்திற்கு கொரோனா பாதிப்பு கீழ் குறைந்துள்ளது.

⇒ மசோதாவை திருப்பி அனுப்பியது குறித்து பிப்.1-ம் தேதி அரசுக்கு விளக்கி உள்ளதாக கவர்னர் மாளிகை அறிக்கை வெளியிட்டுள்ளது.

⇒ நீட் விலக்கு மசோதாவை திரும்ப அனுப்பியதற்கு எதிர்ப்பு தெரிவித்து திமுக, காங்கிரஸ், இந்திய கம்யூ. உள்ளிட்ட தமிழக எம்.பி.க்கள் அவையில் இருந்து நேற்று வெளிநடப்பு செய்தனர்.

⇒ ஜம்மு-காஷ்மீரில் பிப்.8 வரை பனிப்பொழிவு நீடிக்கும் என்று வானில ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

⇒ பள்ளிகளுக்கு நேரடியாக வருவது தொடர்பாக பெற்றோரின் ஒப்புதல் தேவையா என்பதை மாநில அரசுகளே முடிவெடுக்கலாம் என்று மத்திய கல்வித்துறை தெரிவித்துள்ளது.

⇒ தமிழக சட்டமன்ற அனைத்து கட்சி தலைவர்களுடன் ஆலோசனை கூட்டம் நடைபெறும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

⇒ சென்னையில் பிப்ரவரி 16-ஆம் தேதி முதல் மார்ச் 6-ஆம் தேதி வரை புத்தக கண்காட்சி நடத்த தமிழக அரசு அனுமதி வழங்கியுள்ளது. இதற்கான அறிவிப்பை தமிழக அரசு நேற்று வெளியிட்டுள்ளது.